# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் ஆனி மாதம் / ஜூன் 6 / 2022 June 6 /2022


## கடும் நோய் உள்ளவர்கள் உடனடியாக இலவச பரிசோதனை

### மருத்துவமனைக்கு செல்ல பணிக்கப்படுவர்

**கிள்ளான்:-**
"சிலாங்கூர் சாரிங்" எனப்படும் மாநில அரசின் இலவச மருத்துவ பரிசோதனையில் கலந்து கொள்வோர் கடும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் அவர்கள் உடனடியாக சுகாதாரமையம் அல்லது நிபுணத்துவ மருத்துவமனைக்கு செல்லும்படி பணிக்கப்படுவர்.

கடுமையான நோய் இருப்பது கண்டறியப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு செல்லும்படி பணிக்கும் உத்தரவு இலவச பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 48 மணி நேரத்திற்குள் செலங்கா செயலி வாயிலாக வழங்கப்படும் என்று சிலாங்கூர் பொது சுகாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் டாக்டர் முகமது ஃபர்ஹான் ருஸ்லி கூறினார்.

குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப் பட்டுள் ளதை உறுதி செய் வதற்கு உண்டாகும் மருத்துவச் செலவினங்களை மாநில அரசே ஏற்றுக் கொள்ளும் என்று அவர் சொன்னார்.

ஒருவருக்கு ஆபத்தான நோய் இருப்பது அல்லது நோய் பீடிக்கும் சாத்தியம் உள்ளது கண்டறியப்பட்டால் எங்களுடன் ஒருங்கிணைப்பில் இருக்கும் மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், மலேசிய தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை மற்றும் மேமோகிராம் மையம் ஆகியவற்றின் நிபுணர்களிடம் அவர்கள் சிகிச்சைக்கு அனுப்பப்படுவர். சம்பந்தப்பட்ட மருத்துவ நிபுணரை சந்திப்பதற்கு பொருத்தமான தேதியை சம்பந்தப்பட்ட நோயாளி செலங்கா செயலி வாயிலாக தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். என்று அவர் குறிப்பிட்டார். சிலாங்கூர் சாரிங் திட்டம் தொடர்பில் இங்குள்ள விண்ட்ஹாம் அக்மார் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். பொது சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட்டும் இந்த செய்தியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டார். வரும் மே 22 ஆம் தேதி தொடங்கி செப்டம்பர் 4 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டத்தின் போது அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள சிலாங்கூர் சுகாதார தன்னார்வலர் குழுவின் (சுக்கா) பணிகள் மீண்டும் தீவிரப்படுத்தப்படும் என்றும் டாக்டர் ஃபர்ஹான் தெரிவித்தார்.



மேலும் செய்திகளுக்கு பக்கம் 6

## பள்ளிகளின் வசதிகளைமேம்படுத்த சிலாங்கூர் அரசு வெ.2.65 கோடி ஒதுக்கியது

ஷா ஆலம்–
சிலாங்கூரில் உள்ள ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த மாநில அரசு வெ.2.65 கோடி ஒதுக்கி யுள்ளது. குறிப்பாக மத்திய அரசிடம் இருந்து முழு உதவி பெறாத பள்ளிகளுக்கு இந்த பங்களிப்பு வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். "இதற்கு முன் பல பள்ளிகளுக்குச் சென்றபோது, முழு உதவி பெறும் பள்ளிகளுக்கும் நல்ல கல்வி உள்கட்டமைப்பைத் தயாரிப்பதில் மாநில அரசு உட்பட பல்வேறு தரப்பினரின் ஆதரவு தேவை என்பதை நான் கவனித்தேன்," என்று அவர் கூறினார்.

இன்று முன்னதாக சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கட்டிடத்தில் உள்ள டேவான் ஜூப்லி பேராக்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழா 2022 மற்றும் சிலாங்கூர் மக்கள் பயிற்சித் திட்டத்தை (PTRS) துவக்கி வைத்து அமிருடின் கூறினார். இந்தப் பாடசாலைகளின் முன்னேற்றத் தேவைகளை ஆதரிப்பதற்காக பல விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து, இந்தப் பாடசாலைகளுக்கு உதவிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். கடந்த ஆண்டு டிசம்பரில், சிலாங்கூரில் உள்ள 637 பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த மாநில அரசு வெ.2.4 கோடியினை விநியோகித்தது. சமய ஆரம்ப பள்ளிகளுக்கு தோராயமாக 93 லட்சம் ரிங்கிட், சீன வட்டார மொழி பள்ளிகளுக்கு 90 லட்சம் ரிங்கிட் மற்றும் ஆரம்ப தமிழ்மொழி பள்ளிகளுக்கு 45 லட்சம் ரிங்கிட் வழங்கப்பட்டது.


பக்கம் 2 — சிலாங்கூர் அரசின் கார்னிவெல் கெர்ஜாயா மெகா திட்டத்தின் வழி 20,000 வேலை வாய்ப்புகள்

பக்கம் 6 — மூன்று கிலோமீட்டர் சைக்கிளை மிதித்து, இலவச கண் பரிசோதனையில் கலந்து மாணவர் பயனடைகிறார்கள்

பக்கம் 14 — லுவாஸ் துரித நடவடிக்கை: லங்காட் ஆற்றில் நீர் தூய்மைக்கேடு தடுக்கப்பட்டது

# புதிய சமூக நலத் திட்ட வடிவத்தை அறிமுகப்படுத்த

## தொகுதிகளுக்கு ஜூலை மாதம் பயணம்

## - மந்திரி புசார்

கிள்ளான்:–

சமூக நலத் திட்டத்தின் புதிய வடிவத்தை அறிமுகப்படுத்துவதற்காக வரும் ஜூலை மாதம் மாநில அரசு அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளும். அமலாக்கம் செய்யப்படும் திட்டங்கள் தொடர்பில் மேலும் விரிவான அளவில் விளக்கங்கள் இப்பயணத்தின் போது




பொது மக்களுக்கு வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். மாநில அரசின் திட்டங்கள் தொடர்பில் புதிய விளக்கம், புதிய விதிகள் மற்றும் புதிய வடிவம் மற்றும் புதிய அணுகுமுறை குறித்து மக்களுக்கு விளக்கமளிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நாடாளுமன்றத் தொகுதிக்கும் ஜூலை மாதம் வருகை புரிவேன் என்றார் அவர்.

நாங்கள் திட்டத்தின் பெயரை மட்டும் மாற்றவில்லை. நமக்கிடையிலான அன்பின் உணர்வுகளையும் வெளிப்படுத்தவும் விரும்புகிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.இங்குள்ள பண்டமாரான் விளையாட்டு மையத் தொகுதியில் நேற்று நடைபெற்ற மாநில அரசின் நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பரிவு மற்றும் அக்கறையின் அடிப்படையில் மட்டும் சமூல நலப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, மக்களிடம் மாநில அரசு கொண்டுள்ள அன்பை புலப்படுத்தும் விதமாகவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் மேலும் சொன்னார்.சமூகத்தை உருவாக்கக்கூடிய மற்றும் பரிவுமிக்க மாநிலமாக அடையாளப்படுத்தக் கூடிய ஒரு தளமாகவும் இந்த சமூக நலத் திட்டங்கள் அமைக்கின்றன என்று அவர் கூறினார்.

தற்போது அமலில் இருந்து வரும் பெடுலி ராக்யாட் திட்டத்திற்கு பதிலாக இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.பி.எஸ்.) திட்டத்தை மாநில அரசு அமல்படுத்தவுள்ளதாக அமிருடின் கடந்த 17 ஆம் தேதி கூறியிருந்தார்.

## சிலாங்கூரில் முதல் காலாண்டில்

# 160,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கம்

## - மந்திரி புசார்

ஷா ஆலம்:–

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சிலாங்கூர் மக்களுக்கு பல்வேறு துறைகளில் மொத்தம் 163,645 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.கடந்த 2021 மூன்றாம் காலாண்டில் 3.6 விழுக்காடாக இருந்த வேலையின்மை விகிதம் கடந்த ஆண்டின் இறுதியில் 2.9 சதவீதமாக குறைந்துள்ளது என்று அவர் சொன்னார்.இறைவன் அருளால் சிலாங்கூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் சிலாங்கூர் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஏற்ப மாநிலத்தில் வேலையின்மை விகிதம் குறைந்து வருகிறது என்று அவர் டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தின் செழிப்பு மற்றும் மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதாக உற்பத்தி, விவசாயம் மற்றும் கட்டுமானத் துறைகளில் மாநில அரசு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது என்று அமிருடின் கூறினார். எங்களின் இந்த முயற்சி, வேலை வாய்ப்புகளைத் தவிர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி பொருளாதாரத்தில் நேர்மறையான




தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார் அவர். வரும் ஜூன் 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடைபெற உள்ள சிலாங்கூர் மெகா வேலை வாய்ப்புக் கண்காட்சியின் வழி வேலையின்மை விகிதத்தைக் குறைக்க மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சி தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஷா ஆலம் மாநகர் மன்ற மாநாட்டு மையத்தில் நடைபெறும் இந்த மெகா வேலை வாய்ப்பு கண்காட்சியில் பங்கேற்கும் 100 நிறுவனங்கள் சேவை, உற்பத்தி, மின்னியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் சுமார் 20,000 வேலை வாய்ப்புகளை வழங்கும்.வேலை வாய்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் selangorjobportal.com.my எனும் அகப்பக்கம் வாயிலாக முன் பதிவு செய்யலாம் .




## சிலாங்கூர் அரசின்

## கார்னிவெல் கெர்ஜாயா மெகா திட்டத்தின் வழி

# 20,000 வேலை வாய்ப்புகள்

ஷா ஆலம்:–

சிலாங்கூர் மாநில அரசின் ஏற்பாட்டில் ‘‘கார்னிவெல் கெர்ஜாயா மெகா‘‘ எனும் மாபெரும் வேலை வாய்ப்பு கண்காட்சி வரும் ஜூன் மாதம் 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் ஷா ஆலம் மாநகர் மன்ற மாநாட்டு மையத்தில் நடைபெறுகிறது.

இந்த கண்காட்சியில் இருப தாயிரத்திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதாக இளம் தலைமுறையினர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஓத்மான் கூறினார்.

பொது மக்களின் நேரடி பங்கேற்புடன் நடைபெறும் இந்த வேலை வாய்ப்பு கண்காட்சியில் பங்கேற்கும் சுமார் 100 நிறுவனங்கள் சேவை, உற்பத்தி, மின்னியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் பல்வேறு வேலை வாய்ப்புகளை வழங்குவதாக அவர் சொன்னார். இவ்வாண்டின் முதல் காலாண்டில் மாநிலத்தில் வேலையின்மைப் பிரச்னை 3.2 விழுக்காடாக பதிவாகியுள்ளது. இவ்விவகாரத்தை நாங்கள் கடுமையாக கருதுகிறோம். இந்த எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் இந்த வேலை வாய்ப்பு கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளோம் என்றார் அவர்.

கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக கடந்த ஈராண்டுகளாக தடைபட்டிருந்த இந்த கண்காட்சி இம்முறை பொது மக்களின் நேரடி பங்கேற்புடன் பெரிய அளவில் நடத்தப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலை வாய்ப்பு கண்காட்சியில் கும்புலான் பெராங்சாங் சிலாங்கூர், டைகின் மலேசியா சென்.பெர்ஹாட், டி.எச்.எல். எக்ஸ்பிரஸ், டி.ஆர்.பி. ஐக்கோம், ஐயண்ட் மலேசியா, மலேயன் பேங்கிங் பெர்ஹாட் உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.




# எம்பி நான்கு யுபிஎம் மாணவர்களுக்கு படிப்பு உதவியை வழங்கினார்

ஷா ஆலம்:-

டத்தோ மந்திரி புசார், கடந்த செவ்வாய்க்கிழமை தனது அலுவலகத்தில் நடந்த விழாவில், மலேசியா பல்கலைக்கழக புத்ரா (யுபிஎம்) மாணவி நூர் ஃபக்கிரா சுல்பிகார் ஆல் என்பவரிடம் ரிம15,000 நன்கொடையாக வழங்கினார்.

இந்த நன்கொடை யுபிஎம் பிந்துலு வளாகத்தில் விலங்கு ஆரோக்கியம் மற்றும் கால்நடை பராமரிப்பு டிப்ளோமா படிப்பை மேற்கொள்வதற்கும் ஆகும்.

யுபிஎம் முன்னாள் மாணவரான டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, அதே வளாகத்தைச் சேர்ந்த மற்ற மூன்று மாணவர்களுக்கு RM1,000 நன்கொடையாக வழங்கினார். சம்பந்தப்பட்ட மாணவர்கள் முகமது கைரின் டேனிஷ் முகமட் கைரானி, தோட்டம் மற்றும் உணவு முகாமைத்துவத்தில் டிப்ளோமாவில் தேர்ச்சி பெற்ற மாணவர்; நூர் அசீரா அஸ்ரி, டிப்ளோமா மேலாண்மை மற்றும் தோட்டம் மற்றும் நூர் சாஹிரா முகமது நஜ்முடின், வேளாண் மேலாண்மையில் டிப்ளோமா. "இந்த உதவித்தொகையின் பங்களிப்பு குடும்பத்தின் சுமையை குறைக்கும் என்று நான் நம்புகிறேன், மேலும் பி40 குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் படிப்பை வெற்றிகரமாக தொடர உதவும்" என்று அவர் கூறினார்.

## ஆசிரியர்கள் பகடிவதையின் மூல காரணத்தை மறைக்கிறார்கள்




ஷா ஆலம்:-

பள்ளியின் நற்பெயரைப் பாதுகாக்கும் வகையில் மாணவர்கள் பகடிவதை சம்பவங்களை பள்ளி நிர்வாகத்தினர் மறைந்திருப்பது பரவலாக காரணங்களில் ஒன்றாகும்.பல்கலைக்கழக கெபாங்சான் மலேசியா கல்வி ஆய்வு மையத்தின் விரிவுரையாளர் ஒருவர், இந்தப் பிரச்சனையை இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், அதைக் கட்டுப்படுத்த ஆசிரியர்கள் விழிப்புணர்வு பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார் என்று சினார் ஹரியான் தெரிவித்தது. "எனவே, அந்த காரணத்திற்காக, அதிக விழிப்புணர்வு முக்கியமானது. பகடிவதை என்பது சிறிய பிரச்சினை அல்ல, தீவிரமானது பெரியதுமான ஒன்று என்பதை ஆசிரியர்கள் எப்போதும் பள்ளி மாணவர்களுக்கு நினைவூட்ட அல்லது உணர்த்த வேண்டும்.

"பல்வேறு காரணிகளால் பகடிவதை பிரச்சினையை மறைக்க பள்ளியின் முயற்சியை நாங்கள் அதிகம் காண்கிறோம், அவர்கள் பள்ளியின் நற்பெயரைக் பராமரிக்க விரும்புகின்றனர்" என்று மே 19 அன்று டாக்டர் அனுவார் அகமது கூறினார்.எந்தவொரு மாணவரும் பாதிக்கப்பட்டால், அத்தகைய விஷயங்களைக் கையாள்வதில் பள்ளி நிர்வாகமும் தெளிவான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## செந்தோசா சட்டமன்றம் பி40 சிறுவர்களுக்கான இலவச மழலையர் பள்ளியை அறிமுகப்படுத்துகிறது




ஷா ஆலம்:–

சிறுவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெறுவதில் பின்தங்கியிருக்கக் கூடாது என்பதற்காக, செந்தோசா சட்டமன்றம் மக்களுக்கான இலவச மழலையர் பள்ளியை (பி40) அறிமுகப்படுத்தியுள்ளது.குறிப்பாக நான்கு மற்றும் ஐந்து வயதில் தங்கள் குழந்தைகளை மழலையர் பள்ளிக்கு அனுப்ப முடியாமல் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட பெற்றோர்கள் இருப்பதால் இந்த முயற்சி எடுக்கப்பட்டதாக சட்டமன்ற உறுப்பினர் கூறினார்.

"வழக்கமாக, அவர்கள் மழலையர் பள்ளியில் ஆறு வயதில் நுழைகிறார்கள், எனவே பி40 குடும்பங்களை சேர்ந்த சிறுவர்கள் அவர்கள் முன்பே கற்றுக் கொள்ள வேண்டிய சில விஷயங்களை இழக்கிறார்கள்.

"எனவே தாமான் செந்தோசாவில் இந்த மழலையர் பள்ளியை அறிமுகப்படுத்தினோம். இதுவரை, 80க்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஏப்ரல் இறுதியில் வகுப்பிற்குள் நுழைந்துள்ளனர்," என்று சிலாங்கூர்கினியிடம் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.அனைத்து குழந்தைகளுக்கும் காலை உணவு வழங்குவது உட்பட மழலையர் பள்ளியை சீராக நடத்துவதற்காக மாதம் 6,000 ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.



# உணவுப் பொருள்கள் மீதான பணவீக்கம் 4.1% உயர்ந்துள்ளது

கோலாலம்பூர், மே 27 ஏப்ரல் மாதத்திற்கான நுகர்வோர் விலைக் குறியீடு (சிபிஐ) கடந்த ஆண்டு இதே மாதத்தில் 123.1 ஆக இருந்து 2.3 விழுக்காடு உயர்ந்து 125.9 ஆக இருந்தது என்று மலேசிய புள்ளியியல் துறை (டிஓஎஸ்எம்) மே 25 அன்று தெரிவித்துள்ளது.இந்த அதிகரிப்பு ஜனவரி 2011 முதல் ஏப்ரல் 2022 வரையிலான சராசரி பணவீக்கத்தை 1.9 விழுக்காடு விஞ்சியது.

தலைமை புள்ளியியல் நிபுணர் டத்தோஸ்ரீ டாக்டர் முகமட் உசிர் மஹிடின் கூறுகையில், ஏப்ரல் மாதத்தில் உணவுப் பணவீக்கம் 4.1 விழுக்காடாக உயர்ந்துள்ளது, உணவு மற்றும் பானக் குழுவிற்கான உணவுப் பொருட்களில் 89.1 விழுக்காடு அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் (3.2 விழுக்காடு), போக்குவரத்து (3.0 விழுக்காடு), அலங்காரம், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பராமரிப்பு (2.7 விழுக்காடு), இதர பொருட்கள் மற்றும் சேவைகள் (1.8 விழுக்காடு) மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார சேவைகள் (1.3 விழுக்காடு) என்று அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.கல்வியில் 1.0 விழுக்காடு அதிகரித்தது, அதே சமயம் வீட்டுவசதி, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் பிற எரிபொருள்கள் 0.8 விழுக்காடு அதிகரித்தன.

மது பானங்கள் மற்றும் புகையிலை மற்றும் ஆரோக்கியம் ஆகியவை முறையே 0.5 விழுக்காடு மற்றும் 0.2 விழுக்காடு அதிகரித்துள்ளது.“அதே நேரத்தில் ஆடை மற்றும் காலணிகள் கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடும்போது 0.2 விழுக்காடு சரிந்தன,” என்று அவர் விளக்கினார்.

## மக்காச்சோளம் பயிரிடும் திட்டங்கள் 3% வரை இறக்குமதி விநியோகம் குறைவு

ஷா ஆலம்:–

இங்கு அருகிலுள்ள கோலா லங்காட் செலாத்தானில் தானிய மக்காச்சோளம் நடவுத் திட்டம் மற்றும் நெகிரி செம்பிலானின் கிமாசில் மேற்கொள்ள படும் RM30 லட்சம் செலவிலான திட்டத்தின் வழி , இறக்குமதி விநியோகத்தை இரண்டு முதல் மூன்று விழுக்காடு வரை குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிலாங்கூர் விவசாய வளர்ச்சிக் கழகம் (பிகேபிஎஸ்) மற்றும் மந்திரி புசார் நெகிரி செம்பிலான் இணைப்பு அல்லது எம்பிஐஎன்எஸ் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டம், இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தூய்மைப்படுத்தும் பணியை முடிக்கத் திட்டமிடப்பட்டவுடன் தொடங்கப படவுள்ளது என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.

“283.2 ஹெக்டேர் நிலப்பரப்பில் இத்திட்டம் வெளிநாட்டிலிருந்து கால்நடைத் தீவனப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியதன் காரணமாக அதிகரித்து வரும் கோழித் தீவன விலைக்கு ஒரு விரிவான தீர்வுக்கான உறுதிப்பாட்டின் அடையாளமாகும்.

“அமெரிக்காவின் குறிப்புகளின் அடிப்படையில், இந்தப் பயிர் ஆண்டுக்கு மூன்று முறை விளைவிக்க கூடியது, ஒவ்வொரு சுற்றுக்கும் 100 நாட்கள் ஆகும்” என்று மே 18 அன்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.இந்த திட்டத்தை செயல்படுத்துவது, ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான முயற்சி என்றும் அவர் விவரித்தார்.

## தரிசு நிலத்தில் விவசாய தொழில்

ஷா ஆலம்:–

போதுமான உணவு விநியோகத்தை உறுதி செய்வதற்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மாநிலம் முழுவதும் வெறுமையான நிலம் விவசாயத் தளமாகப் பயன்படுத்தப்படும். புக்கிட் சீடிங், கோலா லங்காட்டில் 30 ஏக்கர் நிலம், காய்கறிகள், மிளகாய் மற்றும் தேங்காய் போன்ற பணப்பயிர்களுக்கான இடமாக பல பகுதிகள் விவசாயத்திற்கு ஏற்றதாக கண்டறியப்பட்டுள்ளதாக டத்தோ மந்திரி புசார் கூறினார்.



“இது கடந்த ஆண்டு முதல் சிலாங்கூர் விவசாய மேம்பாட்டுக் கழகத்தால் (பிகேபிஎஸ்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. “உண்மையில், ஏற்பாடு செய்யப்பட்ட உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும் 1,000 முதல் 2,000 ஏக்கர் வரை பயனற்ற நிலங்களைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்” என்று மே 20 அன்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சிலாங்கூர் மாநிலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு (2021–2025) விவசாயத் துறையின் மேம்பாட்டிற்காக மாநில அரசு RM6.7 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.விவசாயப் பகுதிகளை அதிகரிப்பது, உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிப்பது, பிகேபிஎஸ்ஸை வலுப்படுத்துவது, விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையை அதிகரிப்பது மற்றும் நவீன விவசாய முறைகளை செயல்படுத்துவது ஆகியவைகள் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

இறக்குமதி உணவு பொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதைத் தவிர, எதிர்காலத்தில் நாட்டின் உணவு சேமிப்பு மையமாக மாறுவதற்கான சிலாங்கூரின் இலக்குடன் இந்த முயற்சி அமைந்துள்ளது.



## கோழி தீவனத்தின் விலையை குறைக்கும் வழிகள்

ஷா ஆலம்:– மாநில அரசு எதிர்காலத்தில் கோழிக்கு மாற்றுத் தீவனங்களை உற்பத்தி செய்வதற் கான செலவைக் குறைக்க உதவும் என்று விவசாயம் ஆட்சிக்குழு உறுப்பினர் இஸாம் ஹாஷிம் தெரிவித்தார்.கெடாவில் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் தேசிய பல்கலைக்கழகம் மலேசியா (யுகேஎம்) ஆராய்ச்சி முடிவுகள் தொடர்பான அணுகுமுறையை அவர் விளக்கினார்.

“இந்த ஒத்துழைப்புடன், தற்போது கோழி தீவன உற்பத்தி RM1.70 காசாக உள்ளதை 70 சென்னாகக் குறைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்,” என்று அவர் மே 19 அன்று கூறினார், இந்த முறை கால்நடைகள் மற்றும் ஆடுகளுக்கும் பயன்படுத்தப்படலாம்.மாநிலத்தில் கோழி இறைச்சி விநியோகம் குறித்து பொதுமக்கள் கவலைப்பட வேண்டாம், ஏனெனில் சப்ளை துண்டிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய ஒரு முறை உள்ளது என்றார்.

# மக்காச்சோளம் நடும் திட்டத்தால் ஆண்டுக்கு வெ.1.07 கோடி வருமானம்

ஷா ஆலம், மே 27– சிலாங்கூரில் உள்ள கோலா லங்காட் செலாத்தான் மற்றும் நெகிரி செம்பிலான் கிம்மாஸ் ஆகிய இடங்களில் சோளம் நடும் திட்டம் முடிவடையும் போது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5,490 டன்கள் உற்பத்தி செய்ய முடியும்.

இதன் வழி 283.2 ஹெக்டேர் (700 ஏக்கர்) நிலப்பயிர்களின் விளைபொருட்களை உள்ளூர் கால்நடைத் தொழில் நிறுவனங்களுக்குச் சந்தைப்படுத்தலாம் என்று சிலாங்கூர் விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் (பிகேபிஎஸ்) குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கூறினார்.

டாக்டர் முகமது கைரில் முகமது ராஜி இன் கூற்றுப்படி, நெகிரி செம்பிலான் மந்திரி புசார் (இணைப்பு) அல்லது எம்பிஜஎன்எஸ் கூட்டு முயற்சி திட்டம் ஒரு டன்னுக்கு RM1,950 தற்போதைய சந்தை விலை படி ஆண்டுக்கு RM1.07 கோடி வருவாய் ஈட்ட முடியும்.




“இந்த திட்டம் மூலோபாய திட்டமிடலில் பயன்படுத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது, குறிப்பாக உணவு பாதுகாப்பு தொடர்பானது மற்றும் பின்னர் கோழி தீவனத்தின் விலையை கட்டுப்படுத்தலாம்,'' என்று அவர் மே 18 அன்று கூறினார்.

முன்னதாக, சிலாங்கூர் மற்றும் நெகிரி செம்பிலான் முழுவதும் தானிய மக்காச்சோளம் நடும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்ஓயு) கையெழுத்திட்டனர்.

இங்குள்ள பிகேபிஎஸ் ஆர்க்கிட் மண்டபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைக் காண, டத்தோ மந்திரி புசார் டத்தோ' ஸ்ரீ அமிருடின் ஷாரி மற்றும் நெகிரி செம்பிலானின் மந்திரி புசார் டத்தோ 'ஸ்ரீ அமினுடின் ஹாருன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில், கோழித் தீவனத்தின் விலையை ஸ்திரப்படுத்தவும், இறக்குமதி செய்யப்படும் சோளத்தை சார்ந்திருப்பதைக் குறைப்பதும், இந்த ஒத்துழைப்பின் ஒரு பகுதியாகும் என்று முகமது கைரில் கூறினார்.

“இது மாநில அரசின் பரிவுமிக்க திட்டத்தின் கட்டமைப்பிற்குள் சிலாங்கூர் மற்றும் நெகிரி செம்பிலான் அரசாங்கங்களின் நீண்டகால திட்டமிடலின் ஒரு பகுதியாகும்'' என்று அவர் மேலும் கூறினார்.

# அக்ரோ சிலாங்கூர் திட்டத்தில்

## 22 வேளாண் தொழில்முனைவோர் பங்கேற்பு

ஷா ஆலம்–

இங்குள்ள சென்ட்ரல் ஐ–சிட்டியில் நடைபெறும் “ஜெலாஜா அக்ரோ சிலாங்கூர்'' திட்டத்தில் விவசாயம் சார்ந்த பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள 22 தொழில்முனைவோரை சம்பந்த ப்படுத்திய கண்காட்சி சாவடிகள் இடம்பெறவுள்ளன. இந்த வேளாண் பயணத் திட்டத்தில் விற்பனை கடைகள், புத்தாக்க தொழில்நுட்ப மற்றும் விவசாய பொருள் கண்காட்சி ஆகியவை இடம் பெறவுள்ளதாக விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

ஜெலாஜா அக்ரோ சிலாங்கூர் என்பது ஒரு மினி சிலாங்கூர் அக்ரோ பெருவிழாவாகும். விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் பயிரீட்டில் காணப்படும் மேம்பாடுகளை பகிர்ந்து கொள்வதை இத்திட்டம் இலக்காக கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அதிகளவிலான இளைஞர்கள் மற்றும் மகளிரை விவசாயத் துறையின்பால் ஈர்ப்பதை இந்த திட்டம் முதன்மை இலக்காக கொண்டுள்ளது. அதே சமயம், உற்பத்தியாளர்கள், வணிகர்கள் மற்றும் பயனீட்டாளர்களுக்கிடையே வர்த்தக ஒருங்கமைப்பை உருவாக்குவதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும் என்றார் அவர்.



இந்த நிகழ்வில் விவசாயம் சார்ந்த தொழில்நுட்ப அம்சங்கள் வருகையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். மேலும், இங்குள்ள விற்பனை மையங்களின் மூலம் குறைந்த விலையில் விவசாயப் பொருள்கள் விற்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழுவின் மூலம் இந்த ஜெலாஜா சிலாங்கூர் அக்ரோ திட்டத்தை மாநில அரசு இன்று தொடங்கி நான்கு நாட்களுக்கு சென்ட்ரல் ஐ–சிட்டியில் நடத்துகிறது.

# சிலாங்கூர் அரசின் மலிவு விற்பனைத் திட்டத்தின் வழி 60,000 குடும்பங்கள் பயன் பெற்றன

ஷா ஆலம்:–

கடந்தாண்டு டிசம்பர் மாதம் முதல் மாநிலம் முழுவதும் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் மேற்கொள்ளப் பட்ட உணவுப் பொருள் மலிவு விற்பனைத் திட்டத்தின் வழி சுமார் 60,000 குடும்பங்கள் பயன் பெற்றன.இந்த மக்கள் பரிவு விற்பனைத் திட்டத்தின் வாயிலாக மாநில மக்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் காய்கறிகள் உள்ளிட்ட புதிய உணவுப் பொருள்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டியதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மக்கள் புதிய உணவுப் பொருள்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பினைப் பெறுவதை உறுதி செய்யும் நோக்கில் மாநில அரசு சிலாங்கூர் விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக இத்திட்டத்தை அமல்படுத்தியது என்றார் அவர்.

மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் சுமையை தற்காலிக அடிப்படையில் குறைக்கும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது. எனினும், உணவு விநியோகம் மற்றும் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களை சார்ந்திருப்பதை தவிர்ப்பது குறித்து நாம் விரிவாக ஆலோசிக்க வேண்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



இதனிடையே, நெகிரி செம்பிலான் மாநிலத்தின் கிம்மாஸ் மற்றும் சிலாங்கூரின் கோல லங்காட் செலத்தான் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள சோள பயிரீட்டுத் திட்டம், மாநில அரசின் உணவுப் பொருள் விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைவதாகவும் அமிருடின் குறிப்பிட்டார்.

# மலிவு விலையில் கோழி விற்பனைத் திட்டம் ஜூன் மாதம் தொடங்கும்

ஷா ஆலம், மே 27 மலிவு விலையில் கோழி விற்பனை செய்யும் திட்டத்தை சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகமும் (பி.கே.பி.எஸ்.) கோப்பராசி வர்கா ஹிஜ்ரா சிலாங்கூர் (கோஹிஜ்ரா) கூட்டுறவுக் கழகமும் வரும் ஜூன் மாதம் முதல் மேற்கொள்ளவுள்ளன.

இந்த மலிவு விற்பனை மக்கள் பரிவு விற்பனைத் திட்டத்தைக் காட்டிலும் வேறுபட்ட முறையில் மேற்கொள்ளப்படும் என்று நவீன விவசாயம் மற்றும் விவசாய அடிப்படைத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இந்த மலிவு விற்பனை நடைபெறும் இடங்கள் விரைவில் அறிவிக்கப்படும். மக்களுக்கு தொடர்ச்சியாகவும் குறைந்த விலையிலும் கோழிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் சொன்னார். இம்முறை மேற்கொள்ளப்படும் மலிவு விற்பனை மாறுபட்டதாக இருந்தாலும் நிச்சயம் அது பொது மக்களுக்கு லாபம் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

# மூன்று கிலோமீட்டர் சைக்கிளை மிதித்து, இலவச கண் பரிசோதனையில் கலந்து மாணவர் பயனடைகிறார்கள்



சபாக் பெர்ணாம்:–

கடந்த இரண்டு வாரங்களாக நீடித்து வரும் பார்வைக் குறைபாடுகள், வகுப்பில் கவனம் செலுத்துவது பாதித்தது, ஒரு டீனேஜ் சிறுமியை இலவச மருத்துவப் பரிசோதனை செய்யத் தூண்டியது.

14 வயதான பி. பர்வேனாஸ்ரீ, இன்று அருகே உள்ள ஹோட்டல் மற்றும் மினி கிராண்ட் சபாக் கன்வென்ஷன் சென்டரில் சிலாங்கூர் சாரிங் பரிசோதனை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடிவு செய்தார், அத்தை கே மல்லிகா, 59 உடன் தனது வீட்டில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் சைக்கிள் ஓட்டி வந்தார்.

“உண்மையில், எனக்கு கண் வலி உள்ளது, எனவே ஆசிரியர் வெள்ளை பலகையில் என்ன எழுதியுள்ளார் என்பதைப் பார்ப்பது கடினம். இதற்கு முன், பின் வரிசையில் உள்ள எனது மேசை வகுப்பில் கூட என் கண் நிலை நன்றாக இருந்தது.”

“நான் கண் பரிசோதனைக்காக கிளினிக் அல்லது மருத்துவமனைக்கு செல்லவில்லை, ஏனென்றால் அதற்கான செலவைப் பற்றி யோசித்ததே.

தற்செயலாக, ஒரு இலவச சுகாதார பரிசோதனை திட்டம் உள்ளது பற்றி கேள்விப்பட்டேன், அதனால் நான் அத்தையை என்னை கூட்டிச் செல்ல கேட்டேன், ”என்று அவர் கூறினார்.

தேசிய உங்கு அஜிஸ் இடைநிலைப்பள்ளி Sekolah Menengah Kebangsaan (SMK) Ungku Aziz மாணவரான, அவர் தனியாக சைக்கிள் ஓட்டி,வந்து இன்றைய பரிசோதனையில் பங்கு கொண்டார். இந்த இடத்தை அடைய அரை மணி நேரம் எடுத்துக் கொண்டார், ஆனால் நன்முயற்சி திருவினையாக்கும் என்பதனை அறிந்திருக்கிறார்..

“இந்த முயற்சியை இலவசமாக வழங்கிய சிலாங்கூர் அரசாங்கத்திற்கு நான் நன்றியுள்ளவராக இருப்பேன். இப்போது என் கண் நிலை குறித்து அறிந்து கொண்டதால் நான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறேன்.

மருத்துவரின் பரிசோதனைக்குப் பிறகு, எனக்கு தூரத்து பார்வை மட்டுமே இருப்பதாக அவர் எனக்குத் தெரிவித்தார், மேலும் கண்ணாடி அணிய அறிவுறுத்த பட்டேன், ”என்று அவர் கூறினார், அந்த சிறு வயது மாணவி.

## மார்பகப் புற்று நோய் அதிகரிப்பு

### சிலாங்கூர் சாரிங் திட்டத்தில் பரிசோதனை மேற்கொள்ள மகளிருக்கு வலியுறுத்து

ஷா ஆலம் :–

சிலாங்கூர் அரசின் இலவச மருத்துவப் பரிசோதனைத் திட்டமான ‘‘சிலாங்கூர் சாரிங்‘‘ வழி மார்பகப் புற்று நோய்த் தொடர்பான சோதனையை மேற்கொள்ளும்படி மாநிலத்திலுள்ள மகளிர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நாட்டில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் நோயாக மார்பக புற்றுநோய் விளங்குவதோடு நாட்டிலுள்ள மொத்த நோயாளிகள் எண்ணிக்கையில் இத்தரப்பினர் 17.7 விழுக்காடாக உள்ளதாக பொது சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

முன்கூட்டியே பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் இந்நோய் மோசமான கட்டத்தை அடைவதற்கு முன்னரே உரிய சிகிச்சைப் பெற முடியும். இந்நோய் கடுமையாகும் பட்சத்தில் கீமோதெராப்பி உள்ளிட்ட சிகிச்சைகளுக்கு அதிக பணச் செலவு ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.செலங்கா செயலியில் உள்ள தொடக்கக்கட்ட சோதனை பாரத்தில் வழங்கப்படும் விபரங்களைக் கொண்டு செய்யப்படும் இடர் மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த சோதனைக்கான வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார். சிலாங்கூர் அரசு இந்த “சிலாங்கூர் சாரிங்“ திட்டத் திற்காக 34 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது. இதில் எட்டு விதமான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக 39,000 பேர் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இலவச மருத்துவப் பரிசோதனை தொடர்பான மேல் விபரங்களை selangorsaring.selangkah.my என்ற அகப்பக்கம் வாயிலாக அல்லது 1–800–22–6600 என்ற செல்கேர் ஹோட்லைனைத் தொடர்பு கொள்ளலாம். இது தவிர drsitimariah.com/talian-suka எனும் அகப்பக்கம் வாயிலாக சிலாங்கூர் சமூக தன்னார்வலர் அமைப்புடனும் தொடர்பு கொள்ள முடியும்.

## குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட சம்பவம் இதுவரை சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப் படவில்லை



கோலாலம்பூர்:–

குரங்கம்மையால் பாதிக்கப் பட்டதாகக் கூறப்படுவது குறித்து எந்த அறிவிப்பும் தமக்கு வரவில்லை என்று சுகாதார அமைச்சகம் (MOH) ட்விட்டரில் ஒரு பதிவில் உறுதிப் படுத்தியுள்ளது. இது சமூக ஊடகங்களில் வைரலான ஒரு புகைப்படத்திற்கு அது பதிலளித்தது. “புகைப்படம் உண்மை யானதாக இருந்தால், குழந்தையை அருகிலுள்ள அரசு சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று பரிசோ தனை மற்றும் சிகிச்சை அளிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்,” என்று அவர் கூறினார்.

போலியான செய்திகளை பரப்ப வேண்டாம் என்று பொதுமக்கள் அறிவுறுத்தப் படுகிறார்கள், அதற்கு பதிலாக நோயாளிகள் அல்லது உறவினர்கள் நோய் அல்லது பிற உடல்நலப் பிரச்சினைகள் குறித்து முன்கூட்டியே மருத்துவ ஆலோசனையைப் பெற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## 4,177 பேர் இலவச மருத்துவ பரிசோதனைக்கு பதிவு

கிள்ளான்:-

செலங்கா செயலியின் மூலம் சிலாங்கூர் சாரிங் திட்டத்தில் பங்கேற்க மொத்தம் 4,177 நபர்கள் முன்னதாகவே பதிவு செய்தனர். பொது சுகாதார ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமூட், பல சிலாங்கூர் குடிமக்கள் தங்கள் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த இலவச பரிசோதனைக்கு உட்படுத்தும் வாய்ப்பைப் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறார். விண்டம் அக்மார் ஹோட்டலில் சிலாங்கூர் சாரிங் மற்றும் ஹை-டீ நிகழ்ச்சி பற்றிய ஊடகவியலாளர்கள் விளக்க அமர்வில், “எந்தவொரு கிளினிக்கிற்கும் சென்றால், அவர்கள் சமீபத்திய பதிவு களை மருத்துவ களிடம் காட்டக்கூடிய ஒரு சுகாதார பொதுபதிவு முறையை உருவாக்கும் நோக்கத்துடன் இது செயல்படுகிறது” என்று அவர் கூறினார். இதற்கிடையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈஜோக் சட்டமன்றத்தில் நடந்த அறிமுக நிகழ்ச்சியில் மொத்தம் 75 நபர்கள் உடல்நலப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக டாக்டர் சித்தி மரியா தெரிவித்தார். ஒவ்வொரு மாநிலத் தொகுதிக்கும் 500 முதல் 1,000 பங்கேற்பாளர்கள் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், கிராமப்புற மக்களின் ஆர்வத்தை ஈர்ப்பதில் உள்ள சிரமம் காரணமாக பங்கேற் பாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும் அவர் ஒப்புக்கொண்டார். ஏராளமா னோர் பங்கேற்பதை உறுதிசெய்ய விளம்பர முயற்சிகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும்,” என்றார். சிலாங்கூர் சாரிங்கின் வெற்றிக்காக மாநில அரசு சுஆ34 லட்சத்தை ஒதுக்கியுள்ளது, இது 39,000 குடும்ப மருத்துவம், உடல் பருமன் மற்றும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை வரலாறு கொண்ட குடியிருப்பாளர்களுக்கு பயனளிக்கும். அது குறித்து ளநடயபேடிசளயசபேடீ. ளநடயபேமயா.அல என்ற இணைப்பின் மூலம் மேலும் தகவலைப் பெறலாம், செல்கேர் 1-800-22-6600 அல்லது சிலாங்கூர் சமூக சுகாதார தன்னார்வலர்களை drsitimariah.com/talian-suka/ வழியாக அழைக்கவும்.

## இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங்

# ஜூலையில் தொடங்கும்



பெருங்குடல் புற்றுநோயைக் கண்டறிய ஆண்களுக்கு பரிசோதனையை விரிவுபடுத்துவது உட்பட பொதுமக்களுக்கான சுகாதார முயற்சிகளையும் ஐ.எஸ்.பி திட்டம் மேம்படுத்தி வருகின்றனர்

உலு லங்காட்:–

ஐ.பி,ஆர் எனப்படும் மக்கள் நலன் முன்னெடுப்பு திட்டத்திற்கு பதிலாக பரிவுமிக்க சிலாங்கூர் அர்ப்பணிப்பு திட்டம் (ஐ.எஸ்.பி) இந்த ஜூலை முதல் செயல்படுத்தப்படும் என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.

புதிய சூத்திரம் முழுமையாக முடிந்ததும் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். “மக்களுக்கு மாநில அரசின் அக்கறையின் புதிய அணுகு முறையை அறிமுகப்படுத்த சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் (பிங்காஸ்) பதிவு கவுண்டர்கள் திறக்கப்படும். நேற்றிரவு பண்டார் பாரு பாங்கி சமூக வர்த்தக தளத்தில் சிலாங்கூர் ஹரி ராயா திறந்த இல்லத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

மக்கள் நலனுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட கரிசனை, அக்கறை மற்றும் மனிதாபிமான உணர்வின் பரந்த சூழலை ஐ.எஸ்.பி எடுத்துக்காட்டுவதாக அமிருடின் கூறினார். இந்த ஐ.எஸ்.பி. திட்டத்தின் வழி அதிகமான மக்கள் பயன்பெறுவர். கிஸ் எனப்படும் பரிவுமிக்க அன்னைத் திட்டத்திற்கு மாற்றாக அறிமுகப்படுத்தப்படும் சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் (பிங்காஸ்) வழி சுமார் 30,000 பேர் பயன் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்று அவர் சொன்னார்.

கிள்ளான்:–

கை, கால் மற்றும் வாய் தொற்றுநோய் (HFMD) பரவுவதைக் கட்டுப்படுத்த சிலாங்கூர் அரசாங்கம் குழந்தை பராமரிப்பு மையங்களை உன்னிப்பாகக் கண்காணிக்கும். பொது சுகாதார ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமூட் கூறுகையில், மாவட்ட சுகாதார அலுவலகம் (PKD) மூலம் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பராமரிப்பு நிறுவனத்திலும் விளக்க அமர்வுகள் மற்றும் இடர் மதிப்பீடு நடத்தப்படும்.

“வழக்கமான துப்புரவு நடைமுறைகள் குழந்தை பராமரிப்பு மையங்களில் மேற்பரப்புகள் மற்றும் உபகரணங்களில் கிருமிகளை அழிக்க உதவும்.

“அது தவிர, பெற்றோர்கள் தங்கள் ஆரோக்கியமற்ற குழந்தைகளை மழலையர் பள்ளி, குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அல்லது தினப்பராமரிப்பு மையங்களுக்கு அனுப்பாமல் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்,” என்று அவர் கூறினார். விண்டாம் அக்மார் ஹோட்டலில் இன்று ஊடகவியலாளர்களுடன் சிலாங்கூர் சாரிங் மற்றும் ஹை–டீ நிகழ்ச்சி பற்றிய விளக்க அமர்வுக்குப் பிறகு அவர் இவ்வாறு கூறினார். இதற்கிடையில், மே 21 நிலவரப்படி மாநிலத்தில் மொத்தம் 13, 262 , கால் மற்றும் வாய் தொற்றுநோய் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவர்களில் 419 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பெட்டாலிங்கில் அதிகபட்சமாக 4,155 சம்பவங்கள் பதிவாகியுள்ளன, அதைத் தொடர்ந்து உலு லங்காட் (2,608 சம்பவங்கள்), கோம்பாக் (2,112 சம்பவங்கள்), கோலா சிலாங்கூர் (1,277 சம்பவங்கள்), கிள்ளான் (1,122 சம்பவங்கள்), கோலா லங்காட் (732 சம்பவங்கள்), சபாக் பெர்ணாம் (485 சம்பவங்கள்), உலு சிலாங்கூர் (407 சம்பவங்கள்) மற்றும் சிப்பாங் (364 சம்பவங்கள்).



# சிலாங்கூர்

## குழந்தை பராமரிப்பு மையங்களை உன்னிப்பாகக் கண்காணிக்கிறது



### கை, கால் மற்றும் வாய் நோய் தொற்று பற்றிய எச்சரிக்கை

கை, கால் மற்றும் வாய் நோய் (HFMD) குழந்தைகளிடையே அதிகரித்து வருகிறது. ஜனவரி 1 முதல் மே 14 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 31,661 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2021 ஆம் ஆண்டின் இதே காலகட் டத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை 15 மடங்கு அதிகரித்துள்ளது. சிலாங்கூர் 8,864 சம்பவங்கள் அல்லது 28 விழுக்காடு, கோலாலம்பூர் மற்றும் புத்ராஜெயா 4,421 சம்பவங்கள் (14 விழுக்காடு) மற்றும் சபா 2,650 சம்பவங்கள் (8 விழுக்காடு) ஆகியவற்றுடன் எச்சரிக்கை அளவைக் கடந்தன. பாலர் கல்வி மையங்கள் மற்றும் ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளை உள்ளடக்கிய பகல்நேர பராமரிப்பு மையங்களில் பெரும் பாலான நோய்த்தொற்று பரிமாற்றங்கள் நிகழ் கின்றன.



**HFMD என்றால் என்ன?** காக்ஸ்சாக்கி வைரஸ் A16 மற்றும் என்டோவைரஸ் 71 (EV71) ஆகியவற்றால் ஏற்படு கிறது நோயாளியின் உமிழ்நீர், திரவக் குமிழ்கள் மற்றும் மலம் மூலம் பரவுகிறது பொதுவாக ஏழு வயதுக்குட்பட்ட குழந்தை களைத் தாக்குகிறது காய்ச்சல், கால்கள், கைகள், வாய் மற்றும் நாக்கில் கொப்புளங்கள் ஆகிய அறிகுறிகளுடைய குறுந்தொற்றாகும்



### அது தீங்கு தருகிறதா?

பொதுவாக லேசான தொற்று ஒரு சில நோயாளிகள் மூளையழற்சி, நுரையீரல் வீக்கம் மற்றும் மாரடைப்பு போன்ற சிக்கல்களை அனுபவிக்கின்றனர்

### அறிகுறிகள் :

காய்ச்சல், தலைவலி, பசியின்மை தொண்டை, வாய் மற்றும் நாக்கில் புண்கள் கைகள், கால்கள் மற்றும் டயபர் பகுதியில் கொப்புளங்கள்

**சிக்கல்கள் :** நீர்ப்போக்கு சவ்வுகள் மற்றும் மூளையின் பாக்டீரியா தொற்று இதயத்தின் வீக்கம் பார்வை பிரச்சினைகள் அல்லது பார்வை இழத்தல் மரணம்

**சிகிச்சை முறைகள்?** வைரஸைக் அழிக்கும் குறிப்பிட்ட மருந்துகள் அல்லது சிகிச்சைகள் இல்லை உடல் வெப்பநிலை மற்றும் வாயில் வலியைக் குறைப்பதற்கான சிகிச்சை வழங்கப்படும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தொடர்ந்து தண்ணீர் குடிக்கக் கொடுங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும்போது 7–10 நாட்களுக்குள் நோய் தானாகவே குணமாகும்.

### வீட்டில் நோயாளிகளை நிர்வகிக்கும் முறைகள்

லேசான தொற்று உள்ள குழந்தைகளுக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்கலாம் நோயாளிகளுக்கு போதுமான ஓய்வு தேவைகாய்ச்சலையும், வாய் வலியையும் குறைக்க மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து கொடுக்கவும்

நோயாளிகளை தண்ணீர் குடிக்கவும், பிடித்த உணவுகள் மற்றும் பானங்களை உட்கொள்ளவும் ஊக்குவிக்கவும்

கவனமாக கண்காணிக்கவும், நீரிழப்பு மற்றும் கடுமையான சோர்வு போன்ற தீவிர அறிகுறிகளைத் தவிர்க்கவும்

### தடுப்பு நடவடிக்கைகள்

- அறிகுறிகள் உள்ள குழந்தையைப் பகல்நேரப் பராமரிப்பு மையம், மழலையர் பள்ளி அல்லது பள்ளிக்கு அனுப்ப வேண்டாம்
- இருமல் அல்லது தும்மும்போது வாய் மற்றும் மூக்கை மூடிக்கொள்ளவும்
- தூய்மையை பராமரிக்கவும்
- அறிகுறி இருந்தால் உடனடியாக சிகிச்சை பெறவும்
- நோய்த்தொற்று அறிகுறிகள் உள்ள குழந்தையை பொது இடங்களுக்கு கொண்டு வர வேண்டாம்
- அடிக்கடி கைகளை கழுவவும்
- தனிப்பட்ட பொருட்களைப் பகிர வேண்டாம்
- பொம்மைகள், மேஜை மேற்பரப்புகள், நாற்காலிகள் மற்றும் தளங்களை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது சுத்தம் செய்யவும்



# நோன்பு பெருநாள் கொண்டாட்டத்தின் போது
# மக்களுடன் அவர்களின் பிரதிநிதிகள்



செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி.குணராஜ் தொகுதி மக்களுக்கு வாழ்ததுகள் தெரிவிக்கிறார்



சுங்கை பீலேக் சட்டமன்ற உறுப்பினர் ரோனி லியூ தன் சிறுவர்களுக்கு டுயட் ராயா வழங்கினார்.



காஜாங் சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான ஹீ லோய் சியான் காஜாங் மக்களுடன் உணவருந்துகிறார்



பாலோக்கோங் சட்டமன்ற உறுப்பினர் ஒங் சியூங் கீ சிறுவர்களுக்கு டுயர் ராயா வழங்கினார்



கின்ராரா சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான இங் ஹான் சிறுவர்களுக்கு டுயர் ராயா வழங்கினார்



மாநில ஆட்சிக்குழு உறுப்பினரும் கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் வீ.கணபதிராவ் மந்திரி புசாருடன் உணவருந்துகிறார்



கோலக் குபு சட்டமன்ற உறுப்பினர் லீ கீ யோங் சிறுவர்களுக்கு டுயர் ராயா வழங்கினார்

# நோன்பு பெருநாள் போது

# திறந்த இல்ல உபசரிப்பில கலந்துகொண்டவர்கள்


















# குருகுலத் திட்டம் கண்ட கெர்லிங் தமிழ்ப்பள்ளி

நாட்டிலுள்ள தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை தொடர்ந்து சரிவு கண்டு வருவது கவலையளிப் பதாக உள்ளது. தமிழ்ப்பள்ளிகளைத் தக்க வைப்பதற்கும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் பள்ளி நிர்வாகம், பெ.ஆ.சங்கம் மற்றும் பள்ளி மேலாளர் வாரியம் மற்றும் சமூக இயக்கத்தினர் மேற்கொள்ளும் முயற்சிகள் அளப்பரியவை.

அந்த வகையில் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும் அவர்களின் கல்வித் திறனை அதிகரிப்பதற்கும் முயற்சிகளை முன்னெடுத்துள்ள பள்ளிகளில் முக்கிய இடத்தை வகிக்கிறது உலு சிலாங்கூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கெர்லிங் தமிழ்ப்பள்ளி.

பள்ளியையே இருப்பிடமாக கொண்ட குருகுலத் திட்டத்தையும் இருப்பிடத்திற்கு அருகிலேயே பள்ளியைக் கொண்டு வரும் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தையும் அமல்படுத்திய நாட்டின் ஒரே கல்விக்கூடமாக கெர்லிங் தமிழ்ப்பள்ளி விளங்குகிறது.

## காணாமல் போன தோட்டப்பள்ளிகள்

கெர்லிங் நகரிலிருந்து ஜாலான் சுங்கை ஜெர்னே வழியாக சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவுக்கு வளைவுகள் நிறைந்த குறுகிய சாலையில் பயணித்தால் கெர்லிங் தமிழ்ப்பள்ளியை அடையலாம். ஒரு புறம் ஆறு, மறுபுறம் சாலை. இரண்டுக்கும் நடுவே வீற்றிருக்கிறது கெர்லிங் தமிழ்ப்பள்ளி. சுற்றியிருந்த பல தோட்டங்கள் காலப் போக்கில் காணாமல் போக, இப்பள்ளி மட்டும் வனாந்திரத்திற்கு மத்தியில் துணையின்றி தனித்து நிற்கிறது.

சுற்றியிருந்த தோட்டங்களைப் போல் இப்பள்ளியும் காலப்போக்கில் காணாமல் போய்விடக்கூடாது என்பதற்காக பள்ளி நிர்வாகமும் சமூக அமைப்புகளும் எடுத்து வரும் முயற்சிகள் நம்மை பிரமிக்க வைக்கின்றன. பள்ளியின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து நம்மிடம் விவரிக்கிறார் தலைமையாசிரியர் சி. குமார்.

இப்பள்ளி சுமார் 100 க்கும் மாணவர்கள் மற்றும் 11 ஆசிரியர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. 1920 ஆம் ஆண்டில் இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இப்பகுதியில் இருந்த மூன்று பள்ளிகள் ஒருங்கிணைக்கப்பட்டு கடந்த 1978க ஆம் ஆண்டு முதல் ஒரே பள்ளியாக இயங்கி வருகிறது. ஒரு காலக்கட்டத்தில் மாணவர்கள் எண்ணிக்கை 60 ஆக குறைந்த போது மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பள்ளி நிர்வாகம், மேலாளர் வாரியம், பெற்றோர் ஆசிரியர் சங்கம், முன்னாள் மாணவர் சங்கம் ஆகிய தரப்பினர் ஒன்றிணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

## மாணவர்களைத் தத்தெடுத்தல்

அவற்றில் ஒன்றுதான் குருகுலத் திட்டம் இத்திட்டத்தின் கீழ் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களைத் தத்தெடுத்து அவர்களுக்கு தங்குமிட மற்றும் கல்வி வசதியை ஏற்படுத்தி தருகிறோம். இந்நோக்கத்திற்காக 2016இல் மத்திய அரசின் மானியத்தில் 30 பேர் தங்கும் வசதி கொண்ட தங்கும் விடுதியை பள்ளிக்கு அருகில் நிர்மாணித்தோம். இந்த விடுதியில் தற்போது 15 மாணவர்கள் தங்கி இப்பள்ளியில் கல்வி பயின்று வருகின்றனர். இம்மாணவர்களுக்கு உண்டாகும் அனைத்து செலவுகளையும் பள்ளி மேலாளர் வாரியமே ஏற்றுக் கொள்கிறது.

இப்பள்ளியில் பயிலும் பெரும்பாலான மாணவர்கள் கெர்லிங் பட்டணத்தைச் சேர்ந்தர்களாக உள்ளனர். பெருந்தொற்று பரவல் காரணமாக பொது முடக்கம் அமல்படுத்தப்பட்ட போது பள்ளி நடவடிக்கைகளில் அவர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் குடியிருப்புக்கு அருகிலேயே ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து "இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தை அமல்படுத்தினோம். இங்கு 15 கணினிகளுடன் கூடிய கணினி அறை நூலகம் போன்ற வசதிகள் உள்ளன. இந்த மையத்தில் கணினி வகுப்பு, பிரத்தியேக வகுப்பு மற்றும் நூலக சீன மொழி வகுப்பு போன்றவை பள்ளி மேலாளர் வாரியத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக நடத்தப்படுகின்றன என்று குமார் தெரிவித்தார்.

## தலா 300 பேருந்து கட்டணம் - மாநில அரசு

கெர்லிங் பள்ளியில் உள்ள பாலர் பள்ளியில் 18 மாணவர்கள் பயில்கின்றனர்.




மாணவர் எண்ணிக்கையில் சிறிய பள்ளியாக இருந்தாலும் இங்கு அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. கல்வி, விளையாட்டு மற்றும் புறப்பாட நடவடிக்கைகளில் மாணவர்கள் சிறப்பான அடைவு நிலையை பதிவு செய்து வருகின்றனர் என்றார் அவர்.

குருகுலத் திட்டம் மற்றும் இல்லம் தேடிக் கல்வி ஆகிய திட்டங்கள் தவிர்த்து மேலும் பல திட்டங்களை பள்ளி நிர்வாகம், பெ.ஆ.சங்கம், முன்னாள் மாணவர் சங்கத்துடன் இணைந்து தாங்கள் மேற்கொண்டு வருவதாக மேலாளர் வாரியத்தின் தலைவர் டத்தோ த.ஆனந்தன் கூறினார்.

ஒவ்வோராண்டும் பள்ளி தொடங்கும் போது அனைத்து மாணவர்களுக்கும் சீருடை, காலணி மற்றும் பள்ளி உபகரணங்கள் இலவசமாக வழங்குகிறோம். பொது முடக்க அமலாக்கத்திற்குப் பின்னர் இப்பள்ளியில் பயிலும் அனைத்து 100 மாணவர்களுக்கும் இலவச மதிய உணவும் அரசாங்கத்தின் ஆர்.எம்.டி. திட்டத்தில் இடம் பெறாத மாணவர் களுக்கு காலைச் சிற்றுண்டியும் வழங்குகிறோம். நடமாட்டக் கட்டுப் பாட்டு ஆணை காலத்தில் வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடைமுறைப்படுத்தப் பட்டபோது வசதி குறைந்த 40 மாணவர்களுக்கு கைய டக்க கணினிகளை வழங்கினோம். மேலும் ஐந்தாம் மற்றும் ஆறாம் ஆண்டில் பயிலும் 41 மாணவர்களுக்கு மாநில அரசு வழங்கிய இணைய தரவு சேவைக்கான 100 வெள்ளி மானியம் போக எஞ்சியத் தொகையை மேலாளர் வாரியம் பெ.ஆ.சங்கமும் ஏற்றுக் கொண்டன.

## 2021 ம் ஆண்டு சிலாங்கூர் மாநில அரசு 1 லட்சம் மானியம்

இப்பள்ளிக்கு வரும் மாணவர்கள் பள்ளி பேருந்து கட்டணமாக ஆண்டுக்கு 600 வெள்ளி செலுத்த வேண்டியுள்ளது. பெற்றோர்களின் சுமையைக் குறைக்க மாநில அரசு பேருந்து கட்டணமாக வழங்கும் 300 வெள்ளி வழங்குவது போக எஞ்சிய 300 வெள்ளிக் கட்டணத்தை பள்ளி மேலாளர் வாரியம் ஏற்றுக் கொள்கிறது.

இத்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு மாநில அரசு ஆண்டுதோறும் வழங்கி வரும் மானியம் பெரும் துணையாக இருந்து வருகிறது. இதுதவிர தட்சணாமூர்த்தி அறக்கட்டளை அரசு சாரா அமைப்புகள், நன்கொடையாளர்கள் வாயிலாகவும் நிதி பெறப்படுகிறது. பள்ளி நிர்வாகம், மேலாளர் வாரியம், பெ.ஆ.சங்கம், முன்னாள் மாணவர் சங்கம் ஆகிய தரப்பினருக்கு மத்தியில் காணப்படும் அணுக்கமான ஒத்துழைப்பே இத்திட்டங்களின் வெற்றிக்கு காரணமாக இருந்தது என்று வழக்கறிஞருமான டத்தோ ஆனந்தன் தெரிவித்தார்.



## புக்கிட் கெமுனிங், ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயம்

# சமூகச் சேவைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் திருத்தலம்

ஆலயங்கள் வழிபாட்டிற்கு மட்டுமின்றிப் பக்தர்களின் நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கை தற்போது செயல்வடிவம் காணத் தொடங்கியுள்ளது. பல ஆலயங்கள் சமயப் பணிகளுக்குத் தரும் அதே முக்கியத்துவத்தைச் சமூகப் பணிகளுக்கும் தருவதைக் கண்கூடாகக் காண முடிகிறது.

அந்த வகையில் ஷா ஆலம், புக்கிட் கெமுனிங் 8வது மைலில் அமைந்திருக்கும் ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயமும் சமூகத் தொண்டினை எந்தவொரு ஆர்ப்பாட்டமுமில்லாமல் அமைதியாக ஆற்றி வருகிறது,

பிரதானச் சாலையிலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் வீற்றிருக்கும் காரணத்தால் இந்த ஆலயம் பலரது பார்வையில் படாமலிருந்தாலும் ஒவ்வோராண்டும் ஆகஸ்டு மாதம் மாதம் நடைபெறும் இந்த ஆலயத்தின் திருவிழா சிங்கப்பூர் மற்றும் நாடு முழுவதும் உள்ள சுமார் 20,000 பக்தர்களை ஈர்ப்பது அதன் தனிச்சிறப்பாக விளங்குகிறது.



### 100 ஆண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்ட கைப்பிடி மண்

இந்த ஆலயத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி, சமயப் பணி மற்றும் சமூகப் பணி குறித்து நம்மிடம் விவரிக்கிறார் ஆலயத்தின் தலைவர் டத்தோ ஜோ சரவணன்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் அமரர் காளிமுத்துப் பிள்ளை அவர்கள் தமிழகத்தின் தேவாரண்யம் வேட்டைக்கார இருப்பு கிராமக் காளியம்மன் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கைப்பிடி மண்ணைக் கொண்டு சிறிய அளவில் ஆலயம் எழுப்பி வழிபாடு செய்து வந்துள்ளார்.

பின்னர் அவரின் புதல்வர் திரு. கா.அப்பாசாமி அவர்கள் தற்போதுள்ள இடத்திற்கு ஆலயத்தை இடம் மாற்றி அம்மன் சிலை நிறுவி வழிபாட்டைத் தொடர்ந்தார். 1970 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆலயம் விரிவாக்கம் கண்டு தீமிதி உற்சவத்துடன் கூடிய திருவிழா ஆண்டு தோறும் வெகு விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது என்று டத்தோ சரவணன் குறிப்பிட்டார்.

ஆலய நிர்வாகத்தினரின் அரிய முயற்சியால் புதிதாக ஆலயத்தை நிர்மாணிக்கும் பணி கடந்த 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. சுமார் 16 லட்சம் வெள்ளி செலவிலான இந்த ஆலயத்தின் கட்டுமானப் பணி முற்று பெற்றுக் கடந்த 2015 ஆம் ஆண்டு மே முதல் தேதி கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. பக்தர்கள் மற்றும் கொடை நெஞ்சர்கள் வழங்கிய நிதியுதவி ஆலயம் கம்பீரமாக உருவாக்கம் காண உதவி புரிந்தது என்றார் அவர். இந்த ஆலயத்தில் உள்ள விநாயகர், காளியம்மன், முனீஸ்வரர், மதுரைவீரன், நாகம்மாள் சந்நிதிகளில் ஆகம விதிப்படி பூஜை புனஸ்காரங்கள் முறையாக நடத்தப்பட்டு வருவதோடு விஷேச நாட்களில் சிறப்பு வழிபாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



### கல்விக்கு உதவி

கல்வி, பொருளாதாரத்தில் சமுதாயம் மேன்மை பெற்று விளங்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கும் காரணத்தால் இவ்வாலயம் திருப்பணிகளுக்குத் தரும் அதே முக்கியத்துவத்தைச் சமூகப் பணிகளுக்கும் தந்து வருவதாக அவர் சொன்னார்.

அந்த வகையில், எமரால்டு பள்ளியில் பயிலும் வசதி குறைந்த மாணவர்கள் எண்மருக்கு ஆண்டு தோறும் சீருடை, பள்ளிக்கட்டணம், உபகரணம் உள்ளிட்ட கல்விக்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறோம்.

மேலும், எமரால்டு, பத்து அம்பாட் மற்றும் செந்தோசா தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குப் பள்ளி உபகரணங்களை வழங்குவதற்கு ஆண்டுதோறும் சுமார் 10,000 வெள்ளி வரை செலவிடுகிறோம். யு.பி.எஸ்.ஆர். தேர்வில் சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்த 7 மாணவர்களுக்கு மடிக்கணினிகளைப் பரிசாக வழங்கினோம்.

கோவிட்–19 பெருந்தொற்று பரவலின் போது சுமார் 1,500 பக்தர்களுக்கு உணவுப் பொருள்கள் அடங்கிய பொட்டலங்களை வழங்கினோம். இது தவிரக் கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 150 பேருக்கு ஆலயத்தில் இரண்டு நாட்களுக்கு அடைக்கலம் கொடுத்து உணவுக்கான ஏற்பாட்டையும் செய்தோம். இதற்கு உண்டான சுமார் 5,000 வெள்ளி செலவை ஆலய நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டனர்.

### வெள்ள அகதிகளுக்கும் உதவி

மேலும், வெள்ளத்தினால் கடுமையான பாதிப்பை எதிர்நோக்கிய 28 குடும்பங்களுக்குத் தலா 1,000 வெள்ளியை உதவித் தொகையாக வழங்கினோம். அதோடு மட்டுமின்றி எங்களை அவ்வப்போது நாடி வரும் பக்தர்களுக்கு உதவிகளை நல்கி வருகிறோம் என்றார்.

இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் மூலம் எங்களுக்கு நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது. மாநில அரசு சார்பாக வெ.20,000 மற்றும் வெ.10,000 என இரு முறை இந்த ஆலயத்திற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

ஆலயத்தின் அறங்காவலர்களாக திரு, கே.சோமசுந்தரம், அ.ஆறுமுகம் ஆகியோரும் துணைத் தலைவராக வி.ரமேஷ், உதவித் தலைவராக டத்தோ கணேசன் ஆகியோர் பொறுப்பு வகிக்கின்றனர். து.மகேஸ்வரன், எம்.குணசேகரன், எஸ்.பாலு, டேவிட் ராஜா, சுரேஷ் ஆகியோர் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

# சிலாங்கூர் சாரிங் திட்டம் என்னும் அரசின் மருத்துவப் பரிசோதனை திட்டம்




## “சிலாங்கூர் சாரிங்“ திட்டம்

“சிலாங்கூர் சாரிங்“ என்பது மாநிலத்திலுள்ள மக்களுக்கு புற்றுநோய், கண் நோய், தொற்றா நோய்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட சில நோய்களுக்கான அறிகுறி உள்ளதா என்பதை முன்கூட்டியே கண்டறியும் நோக்கில் அமல்படுத்தப்பட்ட சுகாதாரப் பரிசோதனைத் திட்டமாகும். சிலாங்கூர் சாரிங் பட்டனை அழுத்துவதன் மூலம் செலங்கா (Selangkah) செயலியில் பதிவு செய்யவும்.

பதிவு செய்யும் நடைமுறையின் போது உங்கள் அடையாளத்தை உறுதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டால் கீழ்க் கண்ட வழிமுறைகளில் ஒன்றைப் பின் பற்றலாம்.

- மீண்டும் முயற்சி செய்யவும்
- அடையாளத்தை உறுதி செய்யாமல் தொடரவும்
- சிலாங்கூர் சாரிங் அதிகாரப்பூர்வ அகப்பக்கம் வாயிலாக பதிவு செய்யவும் (selangorsaring.selangakah.my)

### முக்கிய நினைவூட்டல்

1. பரிசோதனைக் கோட்டா வரையறைக் குட்பட்டது விண்ணப் பிக்கும் செய்யும் ஒவ்வொரு விண்ணப் பதாரருக்கும் பதிவின் போது கேட் கப்பட்ட தொடக்க சோதனைக்கான கேள்விகளின் அடிப்படையில் சோதனை க்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

2. அடையாளத்தை உறுதி செய்ய இயலாது போனால், இலவச பரிசோதனை தினத்தன்று மைகார்டுடன் நேரில் வந்து முகப்பிடங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.

3. இலவச மருத்துவ பரிசோதனை நடைபெறும் இடங்களுக்கு வருவதற்கு முன்னர் சங்கேத குறியீட்டை “ஸ்க்ரின்ஷாட்“ செய்து கொள்ளவும்.

4. ஆண்ட்ரோய்ட் கைப்பேசி வைத்திருப்போர் சீரான சேவையைப் பெறுவதற்கு ஏதுவாக கூகுள் பிளே ஸ்டோரில் செலங்கா செயலியை புதுப்பித்துக் கொள்ளவும்.

### இலக்கு நிர்ணயிக்கப்பட்டத் தரப்பினர்

நோய்க்கான ஆபத்துகள் கொண்டவர்கள் (குடும்ப நோய்ப் பின்னணி, உடல் பருமன், வாழ்க்கை முறை மற்றும் பிற), எந்த மருத்துவமனையிலும் நோய் உறுதி செய்யப்படாதவர்கள் உள்ளிட்ட எல்லா வயதுடைய சிலாங்கூர் மக்கள் அனைவரும் இந்த பரிசோதனைத் திட்டத்தில் பங்கேற்கலாம்.

### தேதி மற்றும் இடம் தொடர்பான பட்டியல்
### மாவட்டம் தேதி தொகுதி இடம்

இந்த திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோ தனைகள் பின்வருமாறு

1. பொதுவான உடல் சோதனை
2. இரத்த சோதனை 3. சிறுநீர் சோதனை
4. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்ச் சோதனை
5. சுய மலப் பரிசோதனை
6. மார்பகப் புற்று நோய் சோதனை

### வழங்கப்படும் நோய்க்கான பரிசோதனைகள் வருமாறு-

#### பிரிவு ஏ- தொற்றா நோய்கள்

1. இருதயம்
2. இரத்த அழுத்தம்
3. நீரிழிவு
4.சிறுநீரகம்

#### பிரிவு பி- புற்றுநோய்

1. பெருங்குடல்
2. புரோஸ்டெட்,
3. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்
4. மார்பக புற்று நோய்

#### பிரிவு சி- கண் சோதனை

1. பார்வை குறைபாடு
2. கண் அழுத்த நோய் (குளுகோமா)
3. விழித்திரை சோதனை (ரெட்டினா)

### கேள்விகள் ஏதும் உண்டா?

இந்த சோதனை தொடர்பில் கேள்விகள் ஏதும் இருந்தால் கீழ்க்கண்ட வழிகளில் தொடர்பு கொள்ளலாம் செல்கேர் ஹோட்லைன்

1–800–22–6600செலங்கா பயனீட்டாளர் நுட்ப சேவை இணைப்பு (Telegram)

சுக்கா ஹோட்லைன் சுக்கா (SUKA)

### வழக்கமாக கேட்கப்படும் கேள்விகள்

**கே:** சிலாங்கூர் சாரிங் திட்டத்திற்கு எவ்வாறு விண்ணப்பம் செய்வது ?

**பதில்-** விண்ணப்பங்களை செலங்கா செயலி வாயிலாக மட்டுமே செய்ய முடியும்.

**கே:** ஏன் சிலாங்கூர் சாரிங் திட்டம் உருவாக் கப்பட்டது ?

**ப :** சிலாங்கூர் மக்களுக்கு முறையான சுகாதாரச் சோதனைக்கான வழிமுறையை ஏற்படுத்தும் நோக்கில் சிலாங்கூர் சாரிங் திட்டம் உருவாக்கப்பட்டது.

**கே:** சிலாங்கூர் சாரிங் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தின் நிலை குறித்து எவ்வாறு அறிந்து கொள்வது ?

**ப :** பதிவின் போது வழங்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களுக்கு சோதனைக்கான பற்றுச்சீட்டுகள் வழங்கப்படும்.

**கே:** இந்த சிலாங்கூர் சாரிங் திட்டம் இலசவமானதா ? அல்லது கட்டணம் செலுத்த வேண்டுமா ?

**ப :** நிர்ணயிக்கப்பட்ட தகுதி அடிப்படையில் இந்த சிலாங்கூர் சாரிங் சேவை இலவசமாக வழங்கப் படுகிறது.

**கே:** சிலாங்கூர் சாரிங் திட்டத்திற்கான கூப்பனை நான் எவ்வாறு பெறுவது ?

**ப :** செலங்கா செயலியின் சிலாங்கூர் சாரிங் பகுதியில் பதிவு செய்ய வேண்டும். சோதனைக்கான கூப்பன் செலங்கா செயலி வழி வழங்கப்படும்

**கே:** ஒவ்வொரு பகுதிக்கும் எத்தனை சிலாங்கூர் சாரிங் கூப்பன்கள் வழங்கப்படும்.

**ப :** தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் அடிப்படையில் ஒவ்வொரு தொகுதியிலும் 500 முதல் 1,000 கூப்பன்கள் வரை வழங்கப்படும்.

**கே:** சிலாங்கூர் சாரிங் கூப்பன்களைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்யும் போது நான் ஏன் இடர் மதிப்பீடு தொடர்பான கேள்விகளுக்கு ஏன் பதிலளிக்க வேண்டும் ?

**ப:** விண்ணப்பதாரர்கள் எந்த மாதிரி சோதனைக்கு தகுதியானவர்கள் என்பதைக் கண்டறிவதற்காக இந்த கேள்விகள் கேட்கப்படுகின்றன. அளிக்கப்பட்ட பதிலின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேக கூப்பன்கள் வழங்கப்படும்.

**கே:** சிலாங்கூர் சாரிங் சோதனை முடிவுகள எவ்வாறு பெற முடியும் ?

**ப :** செலங்கா செயலியின் சிலாங்கூர் சாரிங் பகுதியின் வழி சோதனை முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

**கே:** சிலாங்கூர் சாரிங் பங்கேற்பாளர்களின் சோதனை முடிவுகள் எத்தனை நாட்களில் தயாராகும் ?

**ப:** சோதனை முடிந்த 5 முதல் 7 நாட்களில் முடிவுகள் தயாராகி விடும்.

**கே:** சிலாங்கூர் சாரிங் திட்டத்திற்கு வரும் போது எந்த ஆவணங்களை உடன் கொண்டு வர வேண்டும் ?

**ப :** அடையாள நோக்கத்திற்காகவும் செலங்கா செயலியில் சிலாங்கூர் சாரிங் கூப்பனை பதிவிடுவதற்காகவும் பரிசோதனைக்கு வருவோர் தங்கள் அடையாளக் கார்டை உடன் கொண்டு வரவேண்டும்.

**கே:** இந்த சிலாங்கூர் சாரிங் திட்டத்தில் மலேசியர்கள் மட்டும் பங்கேற்க முடியுமா ?

**ப :** சிலாங்கூர் சாரிங் திட்டத்தில் மலேசியர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.

**கே:** பதிவு செய்த இடத்தை விட வேறு இடத்தில் சிலாங்கூர் சாரிங் பரிசோதனைக்கு விண்ணப்பதாரர்கள் செல்ல முடியுமா ?

**ப :** சிலாங்கூர் சாரிங் திட்டத்திற்கு பதிவு செய்த இடத்திற்கு மட்டுமே விண்ணப்பதாரர்கள் செல்ல முடியும். வேறு இடங்களுக்கு செல்ல முற்றாக அனுமதி மறுக்கப்படுகிறது. இடம் அல்லது தேதியை மாற்ற விரும்புவோர் செயலியில் உள்ள “Tukar Sesi/Tarikh Program” எனும் பட்டனை அழுத்த வேண்டும்.

**கே:** எனது வீட்டிற்கு அருகில் நடைபெறும் சோதனையில் நான் ஏன் பங்கேற்க முடியாது ?

**ப :** நீங்கள் மேற்கொள்ளவுள்ள சோதனை உங்கள் தேர்வுக்குரிய தொகுதியில் மேற்கொள்ளப்படாது. பரிசோதனைக்கு ஏற்பாடு செய்துள்ள தொகுதிகளின் பட்டியலை மட்டுமே எங்கள் செயலி முறை கொண்டுள்ளது.

# இவ்வாண்டில் பி.கே.என்.எஸ். லாபத்தை
# வெ.30 கோடியாக உயர்த்த சிலாங்கூர் இலக்கு

ஷா ஆலம்:–
சிலாங்கூர் மாநில மேம்பாட்டுக் கழகம் (பி.கே.என்.எஸ்.) இவ்வாண்டு 30 கோடி வெள்ளி லாபம் ஈட்ட சிலாங்கூர் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

அக்கழகத்தின் துணை நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கை, கட்டுமானத் தொழில் துறையில் காணப்படும் நேர்மறையான மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக

மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கடந்த 2020 இல் பி.கே.என்.எஸ். 50 கோடி வெள்ளி இழப்பை எதிர்நோக்கியது. எனினும், கடந்தாண்டில் அது 4 கோடி வெள்ளி லாபத்தை பதிவு செய்தது. பி.கே.என்.எஸ். இன்னும் வலுவாக இருப்பதற்கு இதுவே தக்க சான்றாகும் என்றார் அவர்.



நாம் அமல்படுத்திய நீண்டகால, குறுகிய கால திட்டங்கள் நல்ல பலனைத் தந்துள்ளதை இந்த லாபம் காட்டுகிறது. இவ்வாண்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரித்து பணப்புழக்கமும் சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.

கோவிட்–19 பெருந்தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 2020 இல் நமது நிதி நிலை எதிர்மறையான மதிப்பை பதிவு செய்தது. இருந்த போதிலும் பி.கே.என்.எஸ். லாபத்தை ஈட்டியுள்ளது. அக்கழகம் தொடர்ந்து ஆக்ககரமான முறையில் செயல்படுவதை இது காட்டுகிறது என்றார் அவர்.பி.கே.என்.எஸ். ஏற்பாட்டில் இங்குள்ள ஷா ஆலம் மாநாட்டு மையத்தில் நேற்று நடைபெற்ற நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐம்பதாண்டு நிறைவை எட்டும் இந்த கழகம், கால மாறுதலுக்கேற்ப தன்னை புதுப்பித்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# ஷா ஆலம் பட்டணக் காடுகளைப் பாதுகாக்க பிகேஎன்எஸ், யுஐடிஎம் ஒத்துழைக்கிறது




ஷா ஆலம் :–
சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகமும் (பிகேஎன்எஸ்) மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (யுஐடிஎம்) ஷா ஆலம் பட்டணத்திலுள்ள காடு (எஸ்ஏசிஎப்) பகுதியைப் பாதுகாப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இங்குள்ள பண்டார் சியாரா ஆலம் 34.5 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட கார்ப்பரேஷன் வனப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதாக பிகேபிஎஸ் தலைமை நிர்வாக அதிகாரி கூறினார்.

டத்தோ மாமூட் அப்பாஸின் கூற்றுப்படி, இந்த விருப்பத்தை நிறைவேற்ற, அவர்கள் மற்றும் யுஐடிஎம் ஆகியவை கலந்துரையாடி அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்களில், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சி திட்டங்களை உருவாக்க ஷா ஆலம் பாதுகாக்கப்பட்ட வனத்தின் ஒரு பகுதியை வாழும் ஆய்வகமாக' செயல் படுத்துவதற்கு பிகேஎன்எஸ் உதவுகிறது. இன்று பிகேஎன்எஸ் தலைமையகத்தில் பிகேஎன்எஸ் மற்றும் யுஐடிஎம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, " யுஐடிஎம் மாணவர்கள் தொழில்துறையின் உண்மையான உலகத்தை வெளிப்படுத்துவதற்கான தொழில்துறை வேலைவாய்ப்பு மற்றும் மேலாண்மை அடிப்படையில் நாங்கள் உதவுவோம்,'' என்று அவர் கூறினார்.

நகர்ப்புற மேலாண்மை மற்றும் வசதிகள், நகர்ப்புற சமூக–பொருளாதாரம், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மற்றும் பிற தொடர்புடைய துறைகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை பணியாளர்களை யுஐடிஎம் வழங்கும் என்றார். "சியாரா ஆலம் நகரில் அமைந்துள்ள ஷா ஆலம் சமூக வனப் பகுதியின் மேலாண்மை மற்றும் நிலையான வளர்ச்சிக்கு பல்கலைக்கழகம் உதவும்'' என்று அவர் கூறினார்.

# ரவாங் சட்டமன்ற உறுப்பினரின் முயற்சியால் நான்கு வழித்தடங்களில் மீண்டும் பஸ் சேவை



ஷா ஆலம்:–
மாரா லைனர் சென். பெர்ஹாட் நிறுவனத்துடனான ஒத்துழைப்பின் காரணமாக கோலாலம்பூர்–ரவாங் இடையிலான நான்கு முக்கிய வழித்தடங்களில் பஸ் சேவை நேற்று முன்தினம் மீண்டும் தொடங்கப்பட்டது. கோலாலம்பூரின் லெபோ புடு– ரவாங் தடம் மற்றும் கோலாலம்பூர் லெபோ புடு தொடங்கி கன்றி ஹோம்ஸ் வழியாக தாசேக் புத்ரி வரையிலான தடம், கோலாலம்பூர் லெபோ புடு–செலாயாங் பாரு தடம், கோலாலம்பூர் லெபோ புடு–புக்கிட் இடமான் தடம் ஆகியவையே பாதிக்கப்பட்ட அந்த நான்கு வழித் தடங்களாகும் என்று ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார். இந்த பஸ் சேவை தொடர்பான சோதனை ஓட்டத்தை தாமும் மாரா லைனர் நிறுவன பணியாளர்களும் ரவாங் பஸ் முனையத்தில் மேற்கொண்டதாக சுவா தெரிவித்தார். வரும் ஜூன் முதல் தேதி அனைத்து 12 பஸ் சேவைகளையும் மறுபடியும் தொடங்குவது தொடர்பில் இரு தரப்பினரும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். இத்தடங்களுக்கான பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் பள்ளி மற்றும் வேலைக்குச் செல்வோர் பெரும் அவதிக்குள்ளாகினர். இதன் தொடர்பில் தமது தரப்பு நிறையப் புகார்களைப் பெற்றதாக சுவா கூறியிருந்தார்.

SELANGOR INDRU
*Sidang pengarang*
PENASIHAT
Lembaga Editorial MSSB
PENGARANG KUMPULAN
Fathi Aris Omar
KETUA PENGARANG
A. Pakyanathan
JURUGAMBAR
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof
Aras 11, Menara Bank Rakyat,
No.1, Jalan Indah 14/8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor
*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*

# லுவாஸ் துரித நடவடிக்கை: லங்காட் ஆற்றில் நீர் தூய்மைக்கேடு தடுக்கப்பட்டது




ஷா ஆலம்:–

லங்காட் ஆற்றின் அருகே உள்ள கால்வாயில் டீசல் எண்ணெய் கசடுகளை முன்கூட்டியே கண்டறிந்ததன் மூலம் அந்த ஆற்றில் நீர் தூய்மைக்கேடு ஏற்படுவதை லுவாஸ் எனப்படும் சிலாங்கூர் நீர் நிர்வாக வாரியம் வெற்றிகரமாகத் தடுத்துள்ளது.

டீசல் கலவை கால்வாய் வழியாக லங்காட் ஆறு நோக்கி வருவது குறித்த புகாரை லுவாஸ் பெங்குருசான் ஆயர் சிலாங்கூர் நிறுவனத்திடமிருந்து நேற்று மாலை 3.45 மணியளவில் பெற்றதாக சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

அதிகாரிகள் மேற்கொண்ட தீவிர சோதனையில் லோரி பழுதுபார்ப்பு பட்டறை ஒன்று அந்த நீர் மாசுபாட்டிற்கு காரணம் என்று கண்டறியப்பட்டதாக அவர் தெரிவித்தார்.மேலும், அந்த பழுதுபார்ப்பு பட்டறைக்கு அருகிலுள்ள கால்வாயில் எண்ணெய்க் கழிவுகளை லுவாஸ் அதிகாரிகள் கண்டனர். இதன் தொடர்பில் விரிவான விசாரணை மேற்கொள்வதற்கு ஏதுவாக நீர் வள மாசுபாடு அவசர வழிகாட்டியின் படி மஞ்சள் குறியீட்டை லுவாஸ் செயல்படுத்தியது.

அந்த பட்டறையின் உள்ளே, வெளியே உள்பட நான்கு இடங்களிலிருந்து மாசுபாடு மாதிரிகள் சோதனைக்காக சேகரிக்கப்பட்டன எனக் கூறிய அவர், நீர் மாசுபாடு ஏற்பட்ட இடம் செமினி நீர் சுத்திகரிப்பு மையத்திலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது என்றார்.

எண்ணெய் கழிவு லங்காட் ஆற்றில் கலப்பதைத் தடுப்பதற்காக டீசல் கலந்துள்ள கால்வாயில் கார்பன் பவுடர் தூவப்பட்டது என்றார் அவர்.

## சுத்தமான நீர் விநியோகத்தை உறுதி செய்ய

# ஆண்டுக்கு 150 கிலோ மீட்டர் குழாய்கள் மாற்றம்

## – ஆயர் சிலாங்கூர் தகவல்

ஷா ஆலம்:–

சுத்திகரிக்கப்பட்ட நீருக்கான தேவையை ஈடு செய்ய பெங்குருசான் ஆயர் சிலாங்கூர் நிறுவனம் ஆண்டுக்கு 150 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய்களை மாற்றி வருகிறது.சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயாவிலுள்ள 84 லட்சம் பயனீட்டாளர்கள் சுத்தமான மற்றும் பாதுகாப்பான நீரைப் பெறுவதை உறுதி செய்வதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இம்மூன்று பிராந்தியங்களிலும் உள்ள 30,076 கிலோ மீட்டர் குழாய்கள் உச்சபட்ச பாதுகாப்புடன் இருப்பதை ஆயர் சிலாங்கூர் நிறுவனம் எப்போதும் உறுதி செய்து வருகிறது.பயனீட்டாளர்கள் பெறும் ஒவ்வொரு துளி நீரும் பயன்மிக்கதாக இருப்பதை உறுதி செய்வதற்காக ஆண்டு தோறும் 150 கிலோ மீட்டர் தொலைவுக்கு பழைய குழாய்களை மாற்றும் பணியை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம் என்று அந்நிறுவனம் தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு முழுவதும் அட்டவணையிடப்பட்ட 1,562 பராமரிப்பு பணிகளை ஆயர் சிலாங்கூர் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பயனீட்டாளர்கள் பாதுகாப்பான மற்றும் சுத்தமான நீரை தங்கு தடையின்றி பெறுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஆயர் சிலாங்கூர் நிறுவனம் கூறியது.நீடித்த நீர் விநியோகத்தை உறுதி செய்ய கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் 800 கிலோ மீட்டர் தொலைவுக்கு ஆயர் சிலாங்கூர் நிறுவனம் குழாய்களை மாற்றியுள்ளது.





## சிலாங்கூர்-ஜப்பான் இடையே

# கலாசார உறவுகள் வலுப்படுத்தப்படும்

ஷா ஆலம்:–

ஜப்பானுடனான கலாசார உறவுகளை எதிர்காலத்தில் நிகழவிருக்கும் தொடர் நிகழ்வுகளின் மூலம் வலுப்படுத்த சிலாங்கூர் விரும்புகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.நேற்று சிலாங்கூர் மாநில தலைமைச் செயலகத்தில் உள்ள தனது அலுவலகத்தில் மலேசியாவுக்கான ஜப்பான் தூதர் தகாஹாஷி கட்சுஹிகோவை அமிருடின் சந்தித்தார்.தற்போதைய தேசிய மற்றும் வட்டார விவகாரங்களில் எங்கள் கண்ணோட்டங்கள் குறித்து நாங்கள் நீண்ட நேரம் விவாதித்தோம் என்று அமிருடின் தனது டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மையங்கள், அந்தந்த நாடுகளின் தேசிய விநியோகச் சங்கிலிகளில் உள்ள அம்சங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்தின் பாதிப்பு உள்ளிட்ட பல பொதுவான விஷயங்களை அமிருடினும் தகாஹாஷியும் விவாதித்தனர்.

மேலும், இயற்கை பேரிடர்களின் சவாலை எதிர்கொள்வது மற்றும் வயோதிக சமுதாயத்தின் விளைவுகள் ஆகியவை குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர். எதிர்வரும் மாதங்களில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் எங்களுடைய கலாசார உறவுகளை வலுப்படுத்தும் கடப்பாட்டை ஜப்பானிய தூதரும் நானும் உறுதிப்படுத்தினோம் என்று அமிருடின் தெரிவித்தார்.




# சப்புரா நிறுவனத்தை மீட்க பெட்ரோனாஸ் பணம்

## நஜிப்பின் பரிந்துரையை அன்வார் நிராகரித்தார்

ஷா ஆலம்:-

நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் சப்புரா எனர்ஜி பெர்ஹாட் நிறுவனத்தை இழப்பிலிருந்து மீட்க பெட்ரோனாஸ் பணத்தைப் பயன்படுத்த முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் முன் வைத்த பரிந்துரையை டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நிராகரித்துள்ளார்.

அரசாங்க சார்பு நிறுவனம் என்ற முறையில் பெட்ரானாஸூம் நாட்டு மக்களுக்குச் சொந்தமான என்பதை எதிர்க்கட்சித் தலைவருமான அன்வார் நஜிப்பிற்கு நினைவுறுத்தினார்.

நேற்றிரவு இங்கு நடைபெற்ற பொது விவாதத்தின் போது அவர் இதனைக் கூறினார். இந்த விவாதம் பல்வேறு ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

பிரச்சனைகள் எழும்போதெல்லாம் ஒரு காசுகூட அரசாங்கப் பணம் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறப் படுவதை நான் பல முறை கேட்டுள்ளேன். ஒரு காசுகூட பயன்படுத்தவில்லை எனக் கூறி விட்டு பெட்ரோனாஸ் பணத்தைக் கோடிக்கணக்கில் பயன்படுத்துகிறோம். பெட்ரோனாஸ் யாருக்குச் சொந்த மானது? அது அரசுக்குச் சொந்தமானது. அது நாட்டு மக்கள் சொத்து என்பது இது பொருளாகும் என்றார் அவர். முன்னதாக இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய நஜிப், சப்புரா எனர்ஜி நிறுவனத்தை ஒரு காசுகூட அரசாங்கப் பணத்தைப் பயன்படுத்தாமல் பெட்ரோனாஸ் நிறுவனத்தின் மூலம் மீட்கலாம் என்று பரிந்துரைத்திருந்தார்.

சப்புரா எனர்ஜி நிறுவனத்தின் பிரச்சனைகளுக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய தடயவியல் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அன்வார் வலியுறுத்தினார்.கடந்த 2018 ஆம் ஆண்டில் அந்நிறுவனம் 250 கோடி வெள்ளி இழப்பை எதிர்நோக்கிய போது அந்நிறுவனத்தின் தலைமை செயல்முறை அதிகாரியின் வருமானம் 7 கோடியே 19 லட்சம் வெள்ளியாக இருந்தது ஒரு நிறுவனத்திற்கு உதவ வேண்டு மானால் அதனை இழப்பிலிருந்து காப்பாற்றுவது சரியான வழியல்ல. மாறாக தடயவியல் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார் அவர்.

உதாரணத்திற்கு பெர்வாஜா நிறுவனத்திற்கு உதவும்படி நான் பணிக்கப்பட்ட போது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி தடயவியல் தணிக்கையை மேற்கொள்ளும்படி பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் தணிக்கை நிறுவனத்திற்கு உத்தரவிட்டிருந்தேன் என்று அவர் சொன்னார்.



# பெருந்தொற்று காலத்தில் நிகழ்ந்த நிதி முறைகேடுகளை அம்பலப்படுத்துவீர்

## எம்.ஏ.சி.சி.க்கு அன்வார் கோரிக்கை

ஷா ஆலம்-

ஈராண்டுகளுக்கு முன்னர் நாடு கோவிட்-19 பெருந்தொற்றை எதிர்நோக்கியிருந்த போது நிகழ்ந்த நிதி முறைகேட்டை அம்பலப் படுத்தும்படி ஊழல் தடுப்பு ஆணையத்தை (எம்.ஏ.சி.சி.) டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தியுள்ளார்.

ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிரான கடும் நடவடிக்கை சமூகத்தின் உயர்ந்தபட்ச உயர்நெறியை பிரதிபலிப்பதாக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவருமான அவர் சொன்னார். ஊழல் விஷயத்தில் நாம் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளக்கூடாது. ஆகவே ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

கடந்த ஈராண்டுகளாக பெருந்தொற்று நம்மைத் தாக்கிய நிலையில் மக்கள் நிதியைக் கொள்ளையிட்ட கொள்ளையர்களை எம்.ஏ.சி.சி. அம்பலப்படுத்த வேண்டும் என்பதோடு அவர்களை கடுமையாக தண்டிக்கவும் வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இதனிடையே, 1எம்.டி.பி. நிறுவனத்தின் சொத்துகளை திரும்பக் கொண்டு வருவது தொடர்பில் எம்.ஏ.சி.சி. ஆணையர் டான்ஸ்ரீ அஸாம் பாக்கி வெளியிட்ட அறிக்கையை டத்தோஸ்ரீ அன்வார் வரவேற்றார்.

ஈராண்டுகளுக்கு முன்னர் நாட்டில் கோவிட்-19 பெருந் தொற்று பரவிய போது சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட சில கொள்முதல் நடவடிக்கைகளில் ஊழல் நிகழ்ந்துள்ளதாக அஸாம் பாக்கி நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

# கோவிட்-19 தொடர்பான கொள்முதல் விவகாரத்தில் எம்ஏசிசி-யின் விசாரணைக்கு

## ஒத்துழைக்க முன்னாள் சுகாதார அமைச்சர்

## டாக்டர் ஆதாம் பாபா தயார்.



கோலாலம்பூர் :-

**கோவிட்-19** தொடர்பான கொள்முதல் விவகாரத்தில் எம்ஏசிசி யின் விசாரணைக்கு ஒத்துழைக்க முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் ஆதாம் பாபா தயார். முன்னாள் சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஆதாம் பாபா, கோவிட்-19 தொடர்பான கொள்முதலில் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மலேசிய ஊழல் எதிர்ப்பு ஆணையத்துடன் (MACC) ஒத்துழைக்கத் தயார் என அறிவித்துள்ளார்.

நாடு தொற்றுநோயை எதிர்கொண்டபோது சுகாதார அமைச்சராக இருந்த அவர், இது குறித்து தனக்கு புகார்கள் வந்ததாக ஒப்புக்கொண்டார், இதனால் இந்த விஷயம் நிர்வாக மட்டத்தில் நடந்தது என்று விளக்கினார்.

அவரைப் பொறுத்தவரை, தொற்றுநோய் சூழ்நிலையில், பல கொள்முதல் செயல்முறைகள் சாதாரண நடைமுறைகளின் வழியாக செல்லவில்லை, மேலும் இந்த விஷயத்தை செயல்படுத்துவதில் குழப்பம் இருந்ததை ஒப்புக்கொண்டார்.

“நாங்கள் அவசரகால கொள்முதலைப் பயன்படுத்தினோம், எனவே பல விஷயங்களை விரைவாகச் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. சிலர் முதலில் ஆர்டர் செய்ய வேண்டும், சிலருக்கு வைப்புத்தொகை தேவை. இது வழக்கமான செயல்முறைகளில் நடக்கவில்லை, நான் அறிந்த விஷயங்களில் ஒரு அமைச்சராக, அவர்களுக்கு ஆலோசனை வழங்கினேன்.

“அமைச்சராக, கொள்கை மற்றும் செயல் படுத்தலை நான் கவனித்து கொண்டேன். MACC உடன் ஒத்துழைக்க நான் தயாராக இருக்கிறேன், என்று அவர் சொன்னார்.



# கெஅடிலான் தேர்தல் சிலாங்கூர் மாநில தொகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் பட்டியல்

ஷா ஆலம்:–

கெஅடிலான் கட்சியின் 2022 ஆம் ஆண்டிற்கான தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 22 தொகுதிகளில் போட்டியிட்ட பல முக்கியத் தலைவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

குறிப்பாக சிலாங்கூர் மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, ரபிஸி, ரம்லி, சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில், சுபாங் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சிவராசா ஆகியோரும் வெற்றி பெற்ற வேட்பாளர்களில் அடங்குவர்.

இதனிடையே, உலு சிலாங்கூர் தொகுதியில் அத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜூன் லியோ ஹிசியாட் ஹூய் டாக்டர் சத்திய பிரகாஷ் நடராஜனிடம் தோல்வி கண்டு அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

இத்தேர்தலில் திருப்பம் நிறைந்த மற்றொரு முடிவை கோல சிலாங்கூர் தொகுதி கண்டுள்ளது. இத்தொகுதியில் நடைபெற்ற நான்கு முனைப் போட்டியில் கெஅடிலான் கட்சி இளைஞர் பிரிவுன் முன்னாள் உதவித் தலைவர் தீபன் சுப்பிரமணியம் சட்டமன்ற உறுப்பினர் ஜூவாய்ரியா ஜூல்கிப்ளியைத் தோற்கடித்தார்.

## சிலாங்கூர் மாநிலத்தில் கெஅடிலான் தொகுதி தலைவர்கள்

### தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு-

கோம்பாக் : டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி
ஷா ஆலம் : ரோட்சியா இஸ்மாயில்
உலு சிலாங்கூர் : டாக்டர் சத்திய பிரகாஷ் நடராஜன்
கோல சிலாங்கூர் : தீபன் சுப்பிரமணியம்
அம்பாங் : டாயிங் முகமது ரிடுவான் பாச்சோக்
பாண்டான் : ரபிஸி ரம்லி
சபாக் பெர்ணம் : அகமது முஸ்தாயின் ஓத்மான்
சுங்கை பெசார் : அஸார் அச்சேல்
தஞ்சோங் காராங் : முகமது யாஹ்யா மாட் ஷாரி
செலாயாங் : வில்லியம் லியோங் ஜின் கின்
உலு லங்காட் : எம். ராஜேந்திர குமார்
பாங்கி : ஜி. பாலமுரளி
பூச்சோங் : எம். அன்பரசன்
சுங்கை பூலோ : ஆர். சிவராசா
டாமன்சாரா : எலிசெபத் வோங்
சுபாங் : எம். பிரவின்
காப்பார் : அஜிஸி ஆயோப்
கிள்ளான் : அஸ்மிஸாம் ஜமான் ஜூரி
கோத்தா ராஜா : ஆர். குணராஜ் ஜோர்ஜ்
கோல லங்காட் : ஆர். ஹரிதாஸ்
சிப்பாங் : பொர்ஹான் அமான் ஷா

# தற்காப்புக் கலைப் போட்டி ஏற்பாடு

ஷா ஆலம் :–

இளம் தலைமுறை, விளையாட்டு மற்றும் மனித மூலதனக் ஆட்சிக்குழு சிலாங்கூர் தற்காப்புக் கலை XTIV போட்டியை இந்த ஞாயிற்றுக்கிழமை ஷா ஆலம் மெர்டேக்கா சதுக்கத்தில்



நடத்தினார். சிலாங்கூர் மாநில விளையாட்டு கவுன்சில் (MSNS) மற்றும் ஷா ஆலம் சிட்டி கவுன்சில் (MBSA) இணைந்து நடத்தும் இந்தப் போட்டியில் சீலாட் தற்காப்புக் கலைகள் மற்றும் செம்பா நடனம், தேக் வான் டோ மற்றும் சிலம்பம் ஆகியவை வழங்கப்படுகின்றன. காலை 7.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் இந்நிகழ்வில் தற்காப்பு கலைகள், ஏரோபிக்ஸ் மற்றும் தெரு இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் பொதுமக்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. கூடுதலாக, பார்வையாளர்களை கவர அன்றைய தினம் ஒரு அதிர்ஷ்ட குலுக்கலில் வெற்றி பெற்றனர்.

# சீ விளையாட்டு: மலேசியா 36 தங்கப் பதக்கங்களை வென்றது

ஹனோய்:-

ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் திங்கள்கிழமை விளையாட்டுகள் முடிவுக்கு வருவதற்கு இன்னும் மூன்று நாட்களே உள்ள நிலையில், 31வது சீ விளையாட்டுப் போட்டியில் 36 தங்கப் பதக்கங்கள்




என்ற இலக்கை மலேசியக் அணி அடைந்தது. ஆண்கள் குழு குமித்தே போட்டியில் தேசிய கராத்தே அணி இறுதிப் போட்டியில் இந்தோனேசியாவை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதன் மூலம் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தங்கம் கிடைத்தது.

மூன்று புள்ளிகளையும் ஆர்.சர்மேந்திரன், எஸ்.பிரேம் குமார் மற்றும் சூரியா சங்கர் ஹரி சங்கர் ஆகியோர் வழங்கினர்.

இந்தோனேசியா வெள்ளிப் பதக்கத்தையும், வியட்நாம் மற்றும் தாய்லாந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

முன்னதாக, மலேசியாவின் 35வது தங்கத்தை தேசிய துப்பாக்கி சுடுதல் வீராங்கனை நூருல் சியாஸ்யா நாடியா முகமட் அரிஃபின் வழங்கினார், அவர் ஹனோய் விளையாட்டு பயிற்சி மையத்தில் நடந்த சீ விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 10 மீட்டர் (மீ) வாட்டர் பிஸ்டல் இறுதிப் போட்டியில் முதலிடம் பிடித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார்.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lo2 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.